**12.11.2024**

**அ.வ.எண். 274/2012**

**<u>பி.சா.1 சத்தியராஜ் அவர்களின் குறுக்கு விசாரணை</u>**

**1**. தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் **133** செண்ட். தாவா சொத்தின் கிழக்கில் சாலை, மேற்கில் ஏரிக்கரை, வடக்கில் காலி இடம் யாருடையது என்று தெரியவில்லை. நான் கிரையம் வாங்கியதாக கூறும் தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் யார் இருக்கிறார் என்று தற்போது வரை நான் தெரிந்து கொள்ளவில்லையா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் வாதி கிரையம் வாங்கிய **33** செண்ட் இருக்கிறது என்றாலும் அதை மறைப்பதற்குதான் தெரியாது என்று தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதன் அடிப்படையில் நான் தாவா சொத்திற்கு உரிமை கோருகிறேன் என்றால் என்னிடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் உள்ளது.

**2**. எனது கிரையம் ஆவணம் **17.03.2010** அன்று பதிவு செய்யப்பட்டது. பொதுவாக ஒரு சொத்தினை கிரையம் வாங்குவதற்கு முன்பு அதன் வில்லங்கம் பார்ப்பார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சர்வே எண்.**15/1**பி**4** சொத்திற்கு வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். மேற்படி வில்லங்கத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. நான் தாக்கல் செய்த

ஆவணங்களில் வில்லங்க சான்றிதழ் இல்லை. நான் பார்த்த வில்லங்க் சான்றிதழில் என்ன விவரம் இருந்தது என்றால் சொத்தின் உரிமையாளரான ஞானகண்ணு பெயர் அதில் இருந்தது.

3. வா.சா.ஆ.6 ல் அன்னமுத்து, ரவிசந்திரன் மற்றும் செல்வகுமார் ஆகியோர் 08.06.2009 அன்று வாதிக்கு கிரையம் கொடுத்ததாக பதிவாகி உள்ளது என்றால் சரிதான். அதற்கு பின்பு 17.03.2010 அன்று ஞானகண்ணு என்பவர் எனக்கு கிரையம் கொடுத்ததாக வா.சா.ஆ.6 ல் பதிவாகி உள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே நான் வில்லங்கம் பார்த்திருந்தால் எனக்கு முன்பு வாதி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றாலும் நான் வில்லங்கம் பார்க்காமல் தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் ஞானகண்ணு என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளேன் என்றாலும் சரியல்ல.

4. அன்னமுத்து, ரவிசந்திரன் மற்றும் செல்வகுமார் ஆகியோரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியாது. எனது கிரையதாரரான ஞானகண்ணு பெயரில் தாவா சொத்திற்கான ஆவணம் பார்த்தேனா அல்லது தாவா சொத்து அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று விவரம் கூறினாரா என்றால் அவருக்கு அரசாங்கம் மூலமாக தாவா சொத்து கிடைத்தது. அதற்கு பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுகிற பட்டா பி.சா.ஆ.1 என்றால் சரிதான். பி.சா.ஆ.1ல் ஞானகண்ணு என்பவருக்கு அரசாங்கம் ஒப்படைவு பட்டா கொடுக்கப்பட்டதாக வாசகம் உள்ளதா

என்றால் இல்லை. தாவா சொத்து ஞானகண்ணு என்பவருக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டது என்று எனது கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5. தாவா சொத்து ஞானகண்ணுவின் முன்னோர்கள் சொத்தா அல்லது அவரது சுய சம்பாத்திய சொத்தா என்ற விவரத்தினை ஞானகண்ணு என்னிடம் கூறினாரா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஞானகண்ணு கிரையம் வாங்கியதாக கிரைய ஆவணம் ஏதேனும் காண்பித்தாரா என்றால் இல்லை. ஞானகண்ணு பெயரிலோ அல்லது அவரது முன்னோர்கள் பெயரிலோ வருவாய் ஆவணங்கள் ஏதேனும் பார்த்தேனா என்றால் ஞானகண்ணு பெயரில் உள்ள "அ" பதிவேடு பார்த்தேன். அவர் முன்னோர் பெயரில் எந்த ஆவணமும் பார்க்கவில்லை.

6. எந்த வருடத்திற்கான "அ" பதிவேடு பார்த்தேன் என்றால் வருடத்தினை நான் கவனிக்கவில்லை. ஞானகண்ணுவின் முன்னோர்கள் பெயரில் வருவாய் ஆவணங்கள் இல்லாத நிலையிலும் ஞானகண்ணு பெயரில் கிரையம் ஆவணங்கள் இல்லாத நிலையிலும் ஞானகண்ணுவிற்கு அரசாங்கம் கொடுத்தற்கு ஆவணம் இல்லாத நிலையிலும் ஞானகண்ணு என்ற பெயர் உள்ள நபரின் சொத்தினை அதே பெயர் கொண்ட மற்றொரு நபரிடமிருந்து நான் கிரையம் வாங்கி தாவா சொத்தினை அபகரித்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியதாக கூறும் 17.03.2010 காலத்திற்கான அடங்கல் அல்லது கணினி பட்டா ஏதேனும்

பார்த்தேன் என்றால் இல்லை. பி.சா.ஆ.7 சாமிதாஸ் மனைவி அன்னமுத்து, சாமிதாஸ் மகன் ரவிசந்திரன் மற்றும் சாமிதாஸ் மகன் செல்வகுமார் ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7 ல் என்ன தேதி குறிப்பிட்டுள்ளது என்றால் 13.07.2009.

7. பட்டா எப்போது மாறியது என்று குறிப்புரை பகுதியில் குறிப்பிடுவார்கள் என்றால் எனக்கு தெரியாது. பட்டா எப்போது மாறியது என்ற விவரம் குறிப்புரை பகுதியில் தான் குறிப்பிடுவார்கள் என்றாலும் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வாதியின் கிரையதாரர்கள் பெயரில்தான் தாவா சொத்திற்கான பட்டா இருந்தது என்றாலும் சரியல்ல. 2013 ம் வருடம் வரை ஞானகண்ணு பெயரில்தான் பட்டா இருந்தது. அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் பெற்று பார்த்தேன். பி.சா.ஆ.5 தான் அந்த ஆவணம் என்றால் சரிதான்.

8. பி.சா.ஆ 5 ல் நான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுத்து தகவல் பெற்றதாக குறிப்பிடவில்லை என்றால் ஞானகண்ணு மகன் தாவீது தகவல் கோரி எனக்கு அளித்தார். 2010 ம் வருடம் ஞானகண்ணு தாவா சொத்தை எனக்கு கிரையம் கொடுத்ததாக நான் கூறும்போது 2013 ம் வருடம் ஞானகண்ணு மகன் தாவீது தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் மனு கொடுக்க வேண்டி அவசியம் என்ன என்றால் இந்த வழக்கு குறித்து நான் அவரிடம் கேட்டபோது அவர் மனு கொடுத்த

அந்த ஆவணத்தை என்னிடம் கொடுத்தார். தாவா சர்வே எண்.15/1பி4 ன் பட்டா ஞானகண்ணு பெயரிலேயே தான் தாக்கலாகி உள்ளது என்று பி.சா.ஆ 5 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

9. மேற்படி தகவலுக்கு ஆதரவாக பி.சா.ஆ 5 ல் ஆவணம் இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் தலைப்பு சிட்டா பதிவேடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே அந்த ஆவணம் பட்டா இல்லை சிட்டாதான் என்றால் சரிதான். எனவே அந்த சிட்டாவின் அடிப்படையில் ஞானகண்ணு பெயரில் பட்டா உள்ளது என்று தகவல் கொடுத்தது தவறு என்றால் சரிதான். சிட்டா பட்டா எல்லாம் ஒன்றுதான். பி.சா.ஆ.7 ல் 13.02.2009 அன்று பட்டா மாறியதாக குறிப்பு இருக்கும்போது பி.சா.ஆ 5 ல் ஞானகண்ணு பெயரில் 2013 ம் வருடம் வரை பட்டா உள்ளதாக முன்னுக்குபின் முரணாக தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

10. வாதியின் கிரையதாரர்கள் பெயரில் பட்டா மாற்றியதற்கான ஆர்.பி.டி கோப்பினை நீதிமன்றத்திற்கு வரவழைத்து பார்த்தால் உண்மை தெரிய வரும் என்றால் எனக்கு தெரியாது.

(வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)